**தலைப்பு 216 – சமூக சேவைகள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 கணக்காய்வு அபிப்பிராயம்

சமூக சேவைகள் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 ஜுன் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் சமூக சேவைகள் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 பிரிவின் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) சமூக சேவைகள் திணைக்களத்தின் முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) திணைக்களம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் இந்த அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு அணுகுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 94 மற்றும் 2017 திசெம்பர் 27 திகதிய 03/2017 ஆம் இலக்க திறைசேரி பிரதிச் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் கடப்பாடுகளை மேற் கொள்வதற்கு முன்னர் அதற்கான நிதி ஏற்பாடுகள் தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், திணைக்களத்தினால் 07 செலவு விடயங்களில் ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 1,187,076 தொகைக்கான பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொண்டிருந்தது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பாக செயற்பட வேண்டும். | சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கான போதியளவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த ஏற்பாடுகள் அவ்வாறே கிடைத்திருக்காவிடினும் அத்தியவசியமான செலவுகள் மேற்கொள்ள நேரிட்டிருந்தது. விஷேடமாக ஊனமுற்றவர்களுக்கு இருக்கும் நிறுவனங்களின் இடையறாமல் மேற்கொள்ளப்பட வேண்டிய கருமங்கள் அதே விதமாக மேற்கொள்ளப்படாவிடின் நிறுவனங்களை நடாத்திச் செல்வதற்கு சிக்கல் தன்மை நிலைமையொன்று ஏற்படுவதனால் ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்கள் மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது என காட்டப்பட்டிருந்தது |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சர்வதேச ஊன்றுகோள் தின வெகுமதிப் பணம் வழங்குவதற்காக மற்றும் பங்குபற்றல் கொடுப்பனவு ஆக ரூபா 820,000 இற்கான தொகை ஒன்று திணைக்களத்தினால் செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த விடயம், மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினால் அங்கீகரித்திருந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நிறுவனத்தில் வருடாந்தம் மேற்கொள்ளப் படும் இவ்வாறான செயற்பாட்டு தன்மையுள்ள கருமங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்த வேண்டும். | வருடாந்தம் சர்வதேச வெள்ளை ஊன்றுகோள் தினத்திற்காக அதில் பங்குபற்றும் ஊனமுற்றவர் களுக்கு வெகுமதிகள் வழங்குதல் இந்த விடயத்தின் மூலம் நடை பெறுகின்றது. செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது ஆண்டிற்கு ஆண்டு உட்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் மாற்றமடை வதினால் மற்றும் இந்த செலவு விடயம் மூலதன செலவு விடயம் ஒன்று அல்லாதினால் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்படவில்லை என அறிவிக்கப் பட்டிருந்தது. |

**3.2 செய்பணிகளை நிறைவேற்றாமை**

--------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சமூக அடிப்படை புனர்வாழ்வு வேலைத் திட்டத்தில் அடங்கியுள்ள கீழ்வரும் குறிக்கோள்களை நிறைவேற்றியிருக்கவில்லை.<br>(i) சமூகத்தில் காணப்படும் அனைத்து ஊனமுற்ற ஆட்களை சரியாக இனங்காணல், தரவு முறையொன்று ஏற்படுத்தல் மற்றும் நாளது வரை ஆக்கல் | ஊனமுற்ற ஆட்கள் தொடர்பாக தரவு முறைமை யொன்று தயாரித்து நாளது வரை ஆக்கப்பட்டு பேணிச் செல்லப்பட வேண்டும். | புள்ளி விவரத் திணைக்களத் தினதும் பங்குபற்றலுடன் 2019 மார்ச் 25 ஆரம்ப கலந்துரை யாடல் ஒன்று நடாத்தப்பட்டு கணிப்பீட்டு துண்டுப் பிரசுரம் ஒன்று தயாரிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2019 பாதீட்டின் மூலம் ஊனமுற்ற ஆட்களுக்கான தேசிய செயலகத்திற்கு மேற்கூறிய விடயத்திற்காக ரூபா 15 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த மையால் அந்த அலுவலகத் துடன் இணைந்து இந்த விடயத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| (ii) சமூக அடிப்படை புனர் வாழ்வு நிகழ்ச்சித் திட்டத் திற்காக வள நிலையம் ஒன்று ஏற்படுத்தியிருந்த போதிலும் அந்த நிலையத்தின் நிகழ்ச்சித் திட்டங்கள் 2019 மே மாதம் வரை ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. | வள நிலையம் விரைவாக செயற் படுத்துவதன் மூலம் ஊனமுற்ற நபர் களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த நடைமுறை தேசிய சமூக அடிப்படை புனர் வாழ்வு செயல் முறையில் அடிப்படை ஆரம்ப பருவம் ஆகும். கிராமிய மட்டத்தில் இனங்காணப்பட்ட அனைத்து ஊனமுற்ற ஆளுக்கும் புனர்வாழ்வுத் திட்டமொன்று தயாரிக்கப்படுவதுடன் அந்த திட்டத்தை அமுல் நடத்தும் போது விஞ்ஞான ரீதியான மற்றும் தொழிநுட்ப ரீதியான நடைமுறைகளை பயன் படுத்தி புனர்வாழ்வு அலுவல்கள் மேற்கொள்ளப் படுகின்றது. |

### 3.3 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கொட்டாவ தொழிற் பயிற்சி நிலையம் நிர்மாணிப்பதற்கான முன்னைய ஆண்டின் போது ரூபா 25 மில்லியன் தொகை மற்றும் மீளாய்வாண்டின் போது ரூபா 05 மில்லியன் தொகை ஒதுக்கப் பட்டிருந்தது. அவ்வாறாயினும், செயற்திட்டம் ஆரம்பித்தல் தாமதம் ஏற்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் மொத்தச் செலவுகள் ரூபா 12,065,852 தொகை ஆகக் காணப்பட்டதுடன் பௌதீக முன்னேற்றம் 50 சதவீதம் மாத்திரம் காணப்பட்டது. இதனால் திட்டமிட்டிருந்தவாறு ஊனமுற்றவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக தொழிற்பயிற்சி நிலையத்தை ஆரம்பிக்க முடியாதிருந்தது. | நிர்மாண வேலை ஒப்பந்த வேலை களின் கீழ் நிர்மாண வேலைகள் உரிய நேரத்தில் பூர்த்தி செய்து கொள்வதற்காக தேவையான தீவிர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த சிறுவர் வழிகாட்டல் தொழிற்பயிற்சி நிலையம் 2016 திசெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2017 திசெம்பர் அளவில் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் நிறுவனம் சார், சட்டம்சார், சுற்றாடல், காலநிலை காரணிகளின் மீது அந்த இலக்குகளை நோக்கி நெருங்குவதற்கு முடியாது என அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | மட்டக்களப்பு தொழிற்பயிற்சி நிலையம் நிர்மாணித்தல் 2016 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன், அதன் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 100,000,000 தொகையாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 64,736,228 தொகை செலவிடப்பட்டிருந்தது. கட்டிடத்தின் வரைபுகள் மற்றும் மதிப்பீடுகளை மாற்றுதல், உடன்படிக்கை கைச்சாத்திடல் மற்றும் காணி உரித்தாக்கல் ஆகியவற்றில் காணப்பட்ட தாமதங்கள் ஆகிய காரணங் களினால் நிர்மாணவேலை திட்டத்தின் படி மீளாய்வாண்டின் போது முதலாம் கட்ட நிர்மாண | சரியான மதிப்பீடு கள் தயாரித்தல் மற்றும் அதன்படி பெறுகைகள் பெறப்பட்டு கருமத்தை பூர்த்தி செய்வதற்கு செயற்பட வேண்டும். | இது வரை முதலாம் கட்டத்தின் கீழ் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப் பட்டிருந்தன. நிலுவைத் தொகையை 2018 ஆண்டிற்காக அங்கீகரித்து தொகையில் இருந்து செலுத்துவதற்கும் மீதித் தொகையை 2019 ஆண்டின் பாதீட்டு ஏற்பாடுகளின் கீழ் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் 2018 ஆண்டின் போது புவக்பிட்டிய மகளிர் அடைக்கல நிலையம் நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப் பட்ட ஏற்பாடுகளில் இருந்து ரூபா 10 மில்லியன் தொகை நிலையத்தின் நிர்மாண வேலைகளுக்காக |

| | | | |
|---|---|---|---|
| | வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | | மாற்றப்பட்டது. இங்கு அனைத்து வேலைகளுக்கும் தேவையான ஏற்பாடுகள் 2020 பாதீட்டின் மூலம் வழங்குவதற்கு தீர்மானிக்கப் பட்டிருந்தது. |
| (இ) | வட மாகாண இளம் சமூகத்தினரின் பொருளாதார அபிவிருத்தியை குறிக்கோளாகக் கொண்டு கிளிநொச்சி தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று இரண்டு கட்டங்களில் நிர்மாணிப் பதற்காக 2016 ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதன் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 64,000,000 தொகையாகக் காணப்பட்டது. 2018 அக்தோபர் மாதத்தில் இந்த நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி அளவில் ரூபா 54,375,000 தொகை செலவிடப்பட்டு முதலாம் கட்டம் கட்டடத்தின் நிர்மாண வேலை மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | சரியாக மதிப்பீடுகள் தயாரித்தலின் மூலம் உரிய முறையில் ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்துகொள்வ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் அறிவுரை களின் பிரகாரம் கிளிநொச்சி தொழிற்பயிற்சி நிலையத்தை முற்றாக பூர்த்தி செய்வதற்குப் போதியளவு நிதி பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கிளிநொச்சி புதிய தொழிற்பயிற்சி நிறுவனத்தின் இரண்டாம் கட்ட அலுவல்கள் 2020 ஆண்டின் போது ஆரம்பிப் பதற்கு உரிய ஏற்பாடுகள் 2020 பாதீட்டின் மூலம் வழங்குவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாக காட்டப்பட்டிருந்தது. |

### 3.4 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றம் ஒன்றினை பெற்றிருக்காத செயற்திட்டங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புவக்பிடிய தொழிற் பயிற்சி நிறுவனத்தை நவீன மயப் படுத்தல் மற்றும் நிர்மாண வேலைகள் அலுவல்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 50,000,000 இற்கான ஏற்பாடுகள் வழங்கியிருந்த போதிலும் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 18,914,604 தொகை பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | ஏற்பாடுகள் பெற்றுக் கொள்ளும் போது உச்ச மட்ட அளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த தொழிற் பயிற்சி நிலையத்தின் நிர்மாண வேலை அலுவல்கள் கொழும்பு மாவட்ட செயலகத்தின் தொழில் நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வை யின் கீழ் மேற்கொள்ளப் படுவதுடன் 2018 ஆண்டிற்கான ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 50,000,000 இற்கான தொகைக்கு போதிய வேலை நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ரூபா 15,000,000 தொகை ஒன்றும் வழங்கியிருந்த துடன் மீண்டும் உரித்தாக்கப் பட்டது. எவ்வாறாயினும் 2019 ஆண்டின் போது கட்டிடத்தின் அனைத்து கருமங்களும் பூர்த்தி |

செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ளது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கெடவல தொழிற்பயிற்சி நிலையத்தின் இயந்திர கலை பாடநெறியின் போதனாசிரியர் 2018 ஜூலை மாதத்தில் நிறுவனத்தில் இருந்து விளகியிருந்தமையால் அந்த நிறுவனத்தின் 132 உபகரண விடயங்கள் எதுவித தேவைக் கும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | நிறுவனத்தின் பயிற்சி வழங்கும் உபகரணங்கள் உச்ச அளவில் பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடமான போதனாசிரியர் பதவிக்காக அமைய அடிப்படையில் போதனாசிரியர் ஒருவர் சேர்க்கப்பட்டுள்ளனர். அவருக்கும் கிடைக்கும் கொடுப்பனவு போதாமையால் சேவை விட்டுச் சென்றுள்ளார். எவ்வாறாயினும் போதனாசிரியர் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்வதற்கு முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் கேட்டுள்ளேன். |
| (ஆ) | அமுனுகும்புற தொழிற் பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த விடுதியில் 31 கட்டில்களும் வகுப்பறை ஒன்றும் ஓய்வு கூடமும் பயன்படுத்தப்படாமல் செயற்படாது காணப்பட்டது. | நிலையத்தில் சொத்துக்களை பயன்படுத்தக் கூடிய விதத்தில் திட்டமிட வேண்டும். | நிலையத்தின் கட்டிட்களை பயன்படுத்தப்படாமல் காணப் படுகின்றன எனவும் மற்றும் வகுப்பறை வெறுமையாக காணப்பட்டது. எவ்வாறாயினும், அமுனுகும்புற தொழிற் பயிற்சி நிலையம் புனர்வாழ்வு நிலையம் ஒன்றாக நடாத்திச் செல்வதற்காக திட்டமிடப்பட்டி ருந்ததால் இந்த பயன்படுத்தப் படாமல் காணப்படும் இடவசதிகள் மற்றும் பண்டங்களைப் பயன்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| முன்னைய ஆண்டு இறுதி அளவில் 75 ஆக காணப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை மீளாய்வாண்டு இறுதி அளவில் 104 வரை அதிகரித்திருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவ்வெற்றிடங்களின் சிரேஷ்ட மட்டத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி பொது நிருவாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கு அறிவித்திருந்த போதிலும், அப் பதவிகளுக்கான உத்தியோகத்தர்கள் நியமனம் செய்திருக்கவில்லை. |